(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.10/2023 |
| Deposition Of Witness for | : | PW2 |
| Name | : | **திரு.பாலாஜி** |
| Father's Name | : | திரு.மணிமுத்து |
| Village | : | கீழக்கோட்டை |
| Taluk | : | சிவகங்கை |
| Calling | : | Electrician |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd August 2025.**

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u> :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், கீழக்கோட்டை கிராமத்தில் கதவு எண்.290 ல் குடியிருந்து வருகிறேன். நான் Electrician ஆக பணிபுரிந்து வருகிறேன். 13.03.2023 அன்று கல்லல் கிராமம், Golden City-ல் உள்ள எனது தந்தை பெயரில் இருந்த தார்சு வீட்டுடன் கூடிய

மனை இடத்தினை எனது பெயருக்கு இனாம் Settlement ஆக எழுதி கொடுத்துவிட்டார். அதன் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா மாற்றப்பட்டது. அதன் பிறகு வீட்டு வரி ரசீதினை எனது அப்பா பெயரிலிருந்து எனது பெயருக்கு மாற்றம் செய்து 28.03.2023ம் தேதி கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்த ஊராட்சி மன்ற தலைவரான ஆஜர் எதிரி திரு.நாச்சியப்பன் அவர்களிடம் மனு கொடுத்தேன்.

2. அந்த மனுவில் என் பெயரில் ஏற்பட்ட பத்திர நகல், 10(1) பட்டாநகல், எனது ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் மனு உள்ளடங்கிய கோப்பு என்னால் 1ம் எதிரியிடம் கொடுக்கப்பட்டதுதான். அந்த மனுவை நான்தான் எழுதினேன். அந்த மனுவில் தேதி குறிப்பிடவில்லை. அதற்கு காரணம் தலைவர் வந்து விட்டால் மனு கொடுக்கும் சமயத்தில் போடலாம் என்று வைத்திருந்தேன். தலைவர் வந்த வேகத்தில் மனுவினை அன்றைய தேதியில் கொடுத்து விட்டேன். அந்த **மனு உள்ளடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.2** என குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் எதிரி பேசிக்கொள்ளலாம் என்று கூறினார். பிறகு

நானும் கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து சென்று விட்டேன். 10.04.2023 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்தில் 1ம் எதிரியை சந்தித்து நான் வீட்டுவரி ரசீது குறித்து கேட்ட போது ஏற்கனவே 2 வருடம் வீட்டு வரிசெலுத்தாமல் உள்ளது எனவும், அலுவலக செலவு மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கான செலவு ஆக மொத்தம் ரூ.15000/− ஐ 1ம் எதிரி லஞ்சமாக கேட்டார். பிறகு நான் பார்த்துக்கொள்ளலாம் என்று அலுவலகத்திலிருந்து கிளம்பி வந்துவிட்டேன். அதன்பிறகு நான் வேலை சம்பந்தமாக கோயம்புத்தூருக்கு சென்று விட்டேன். பின்பு ஊர்த்திருவிழாவிற்காக எனது கிராமத்திற்கு வந்தேன். பின்பு 09.05.2023 அன்று கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று 1ம் எதிரியை சந்தித்தேன்.

4. அன்று தலைவரிடம் என்ன சார் இவ்வளவு நாள் ஆயிற்று, ரசீது என்ன ஆயிற்று என்று கேட்டேன். நான் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15000/−ஐ ரெடிபண்ணிவிட்டீர்களா என்று தலைவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் என்னிடம் தற்போது பணம் இல்லை என்று கூறினேன். மீண்டும் 11.05.2023 அன்று 1ம் எதிரியை கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்தில் மதியம் சென்று பார்த்தேன். மதியம் சுமார் 12.15 மணி

இருக்கும். 1ம் எதிரியிடம் நான் தற்போது வேலைக்கு போக வேண்டும், ரசீது என்ன ஆச்சு என்று கேட்டேன். அதற்கு ரூ.15000/- லஞ்சமாக கொடு, வேலையை முடித்து தருகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் கூலிவேலைதான் பார்க்கிறேன், என்னால் அவ்வளவு பணம் முடியாது என்று நான் கூறினேன். ரூ.2000/- ஐ குறைத்துக் கொண்டு ரூ.13000/- ஐ கொடுக்கும்படி 1ம் எதிரி என்னிடம் கூறினார். எனக்கு பணம் கொடுத்து ரசீது வாங்க விருப்பம் இல்லாததால் அங்கிருந்து நான் கிளம்பி வந்துவிட்டேன். 12.05.2023 அன்று சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 1ம் எதிரி மீது புகார் கொடுக்க காலை 8.00 மணிக்கு வந்தேன்.

5. அங்கு அலுவகத்திலிருந்த ஒரு நபரிடம் என் பெயரில் வீட்டு வரி மாற்றம் செய்ய கல்லல் ஊராட்சி மன்ற தலைவர் திரு.நாச்சியப்பன் லஞ்சப்பணம் ரூ.13000/- கேட்பதாக கூறினேன். அவர் அந்த அலுவலகத்தில் இருந்த ஒரு அறைக்கு அழைத்து சென்றார். அங்கு இருந்த DSP ஜாண் பிரிட்டோ என்று என்னிடம் கூறினார். அவரிடமும் 1ம் எதிரி லஞ்சப்பணம் கேட்ட விபரம் பற்றியும் நடந்த விபரங்களையும் கூறினேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை கணினி மையத்தில்

தட்டச்சு செய்த புகாரை DSPயிடம் கொடுத்தேன். எனது புகாருடன் பத்திர நகல், 10(1) பட்டா ஆகியவற்றின் நகல்களையும் இணைத்து கொடுத்தேன். அந்த புகாரை நான் சொல்லிதான் கணினி மையத்தில் தட்டச்சு செய்தனர். அந்த **புகார் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. புகார் கொடுத்தவுடன் DSP அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் நகலை என்னிடம் கொடுத்து முதல் தகவல் அறிக்கையில் நகல் கொடுத்ததற்காக முதல் தகவல் அறிக்கையில் Serial No.14–ல் கையொப்பம் வாங்கிக் கொண்டார். **முதல் தகவல் அறிக்கையில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பிறகு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு DSP அவர்கள் இரண்டு நபர்களை வரச் சொன்னார்கள். அதன்பேரில் இரண்டு நபர்கள் அங்கு வந்தனர். ஒருவர் காலை சுமார் 9.45 மணியளவில் வந்தார். மற்றொரு நபர் சுமார் 5 நிமிடம் கழித்து வந்தார். DSP அவர்கள் முதலில் வந்த நபரின் பெயர் கணேசன் என்றும், அவர் மீன் வளத்துறையில் பணிபுரிவதாகவும், மற்றொரு நபரின் பெயர் பாலமுருகன் என்றும், நகர ஊரமைப்பு துறையில்

பணிபுரிவதாகவும் கூறினார். நடந்த விபரங்கள், நான் கொடுத்த புகார், 1ம் எதிரி என்னிடம் கேட்ட லஞ்ச பணம் உள்ளிட்ட விபரங்களை இரண்டு நபர்களிடமும் கூறினேன். நான் சொல்வதெல்லாம் உண்மைதானா என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நானும் உண்மைதான் என்று அவர்களிடம் கூறினேன். நான் 1ம் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.13000/– ஐ அங்கு வந்திருந்த இரண்டு நபர்களிடமும் கொடுத்தேன். அவர்கள் அதை எண்ணிப்பார்த்தார்கள். நான் கொடுத்தது 26 ரூ.500/– நோட்டுகள் ஆகும். DSP அவர்கள் சொல்லிதான் ரூ.13000/–ஐ அங்கு வந்த இரண்டு நபர்களிடம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் 26 ரூ.500/– நோட்டுக்கள் நான் கொடுத்ததுதான். அந்த **பணம் அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ரூபாய் நோட்டுக்களின் எண்களை கணினியில் வந்த இரண்டுநபர்கள் சொல்லச்சொல்ல தட்டச்சு செய்தார்கள்.

7. அந்த பணத்தை DSP அவர்கள் சொல்லி மற்றொரு நபர் திரு.கணேசன் என்பவர் எண்ணிப்பார்த்தார். அதன் பிறகு வெள்ளை நிற பிளாஸ்டிக் டம்ளர் தண்ணீர் வெளியே இருந்து பார்க்கும்படி இருந்தது. இரண்டு டம்ளர்களில் ஏதோ ஒரு பவுடரை அலுவலகத்திலிருந்த துக்காராம் என்ற நபர் அதில் போட்டார். அந்த நோட்டை எண்ணிய நபர் வலது மற்றும்

இடது கையை முழுமையாக அந்த கரைசல் அடங்கிய டம்ளரில் நனைக்கும்படி கூறினார்கள். அந்த கரைசலில் எந்த நிறமாற்றமும் அடையவில்லை. பின்பு நான் ஆஜர் செய்த ரூ.500/- நோட்டுகள் மொத்தம் 26 ன் இரண்டு பக்கத்திலும் பினாப்தலீன் பவுடரை தடவினார்கள். ரூபாய் நோட்டுகளை எனது வலது பாக்கெட்டில் வந்த நபர் ஒருவர் எனது சட்டைப் பாக்கெட்டில் வைத்தார். அதன் பிறகு அந்த கரைசலில் கணேசன் என்ற நபரை இரண்டு கைகளையும் இரண்டு கரைசல்கள் அடங்கிய டம்ளர்களிலும் நனைக்கும்படி சொன்னார்கள். அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அதன் பிறகு பினாப்தலீன் பவுடரை அலுவலகத்தில் வைத்து பூட்டிவிட்டனர். கரைசல்களை கொட்டி அழித்தனர். நாங்கள் அனைவரும் சோப்பு போட்டு கைகளை கழுவிக்கொண்டோம். DSP சார் என்னிடம் அறிவுரை வழங்கினார். நானும் பாலமுருகனும் கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்தில் சென்று 1ம் எதிரி லஞ்ச பணம் கேட்டால் கொடுக்கும்படி அறிவுரை கூறினார். என்னுடன் வந்த பாலமுருகன் என்பவரை நடக்கும் நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிக்கும்படி கூறினார். அவரை யார் 1-ம் எதிரி யார் என்று கேட்டால் சூழ்நிலைக்கு தகுந்தவாறு நடந்து கொள்ளும்படி கூறினார். பணத்தை 1ம்

எதிரி பெற்றுக்கொண்டால் நான் அணிந்திருந்த தொப்பியை கழற்றி மாட்டி சைகை காட்ட வேண்டும் என்று அறிவுரை கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரில் 5 பக்கங்களிலும் 3 வதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் வந்த 2 அரசு சாட்சிகள் கணேசன், பாலமுருகன் ஆகிய இரண்டு நபர்களும் அதில் கையொப்பம் செய்தனர். அதில் அலுவலகத்திற்கு நான் வந்தது முதல் அரசு சாட்சிகள் இருவர் அங்கு வந்து பினாப்தலீன் சோதனை நடத்திக்காட்டியது, கல்லல் பஞ்சாயத்து அலுவலகம் செல்வதற்கு முன்பு வரை என அனைத்து விபரத்தையும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் அனைவரும் அதை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தோம். அந்த ஒப்படைப்பு மகஜர் எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது குறித்து எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. அந்த **ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. நானும் அரசு சாட்சிகள் இருவர், DSP சார் மற்றும் அங்கிருந்த போலிசார்கள் அங்கிருந்த அரசு வாகனத்தில் காலை 10.00 மணிக்கு மேல் கிளம்பி கல்லல் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்த பஸ்டேண்டில் ஜீப்பை நிறுத்தினார். எனக்கும் மற்றொரு அரசு சாட்சி பாலமுருகன்

என்பவருக்கும் DSP சார் கூறிய அறிவுரைகளை ஞாபகப்படுத்தினார். DSP சார், மற்றொரு அரசு சாட்சி கணேசன், போலிசார்கள் ஆகியோர் மரத்தடியில் நின்று கொண்டு எங்களை கண்காணித்தனர். நானும், அரசு சாட்சி பாலமுருகனும் கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு 1ம் எதிரி இருந்தார். அவரிடம் என்னுடைய ரசீது என்ன ஆனது என்று கேட்டேன். அதற்கு நான் சொன்ன லஞ்சப்பணம் ரூ.13000/– என்ன ஆச்சு என்று கேட்டார். நான் ரெடி பண்ணிவிட்டேன் என்று சொன்னேன். மதியத்திற்கு பின்பு வீட்டை பார்த்த பின்பு ரெடி பண்ணிவிடலாம் என்று சொன்னார். அதற்கு பின்பு நானும், அரசு சாட்சியும் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து விட்டோம். எந்த வித சைகையும் காட்டவில்லை. DSP சார் என்ன நடந்தது என்று கேட்டார். நான் அவரிடம் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றும் மதியத்திற்கு பின்பு வீட்டை வந்து பார்த்துவிட்டு ரசீது போட்டு தருவார் என்று சொன்னேன். என்னிடம் வந்த அரசு சாட்சியிடமும் என்ன நடந்தது என்று கேட்டார். நான் சொன்ன விபரம் சரிதான் என்று கூறினார். அதன்பிறகு அன்றே மாலை கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு நானும்அரசு சாட்சி பாலமுருகனும் சென்றோம். அங்கு பஞ்சாயத்து அலுவலகம் பூட்டி

இருந்தது. அதனால் சைகை எதுவும் செய்யாமல் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்துவிட்டோம். அங்கு DSP சார் என்ன ஆச்சு என்று கேட்டார். நான் அலுவலகம் பூட்டி இருந்த விபரத்தை கூறினேன். என்னுடன் வந்த அரசு சாட்சி பாலமுருகனிடமும் நடந்த விபரத்தை கேட்டார். அவரும் நான் சொன்ன விபரத்தையே கூறினார். DSP சார் சொல்லியபடி என்னுடைய அலைபேசி நம்பர். 9342482095 என்ற எண்ணிலிருந்து 1ம் எதிரி நாச்சியப்பனின் அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டேன். அவருடைய அலைபேசி எண் என்னுடைய அலைபேசியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் தற்போது ஞாபகமில்லை loud speaker–ல் போட்டு பேசும்படி DSP சார் என்னிடம் கூறினார். நானும் அவ்வாறு 1ம் எதிரியிடம் அலைபேசியில் பேசினேன். அதற்கு அவர் மீட்டிங்கில் இருப்பதாக கூறினார். திங்கள் கிழமை ஆபிஸில் வந்து பார் என்று கூறினார்.

9. பின்பு அன்று நடந்த விபரங்களை கணினியில் தட்டச்சு செய்து என்னிடமும், இரண்டு அரசு சாட்சிகள் கணேசன், பாலமுருகனிடமும் கையொப்பம் செய்தோம். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தோம். அந்த மகஜரில் 2 பக்கங்களிலும் அடிப்பகுதியில் உள்ள 3வது கையொப்பம்

என்னுடையதுதான். அந்த **மகஜர் அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிரியிடம் லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இருந்தால் திங்கள் கிழமை எங்கள் அலுவலகத்திற்கு வரலாம் என்று DSP சார் என்னிடம் கூறினார். என்னிடம் எனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பினாப்தலீன் தடவப்பட்ட பணம் ரூ.13000/— ஐ என்னிடம் கொடுத்து விட்டார். 15.05.2023 திங்கள் கிழமை அன்று நான் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு காலை சுமார் 8.00 மணிக்கு சென்றேன். அரசு சாட்சிகள் இருவரும் அங்கு வந்திருந்தார்கள். நான் கொண்டு வந்திருந்த ஏற்கனவே பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட பணம் ரூ.13000/— ஐ DSP சார் அவர்களிடம் கொடுத்தேன். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த ஒப்படைப்பு மகஜரான அ.த.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டிருந்த ரூபாய் நோட்டு எண்களுடன் நான் கொண்டு வந்த ரூபாய் நோட்டின் எண்களை ஒப்பிட்டு பார்த்து சரியாக உள்ளது என்று கூறி எனது சட்டையின் மேல் பாக்கெட்டில் அந்த பணத்தை வைத்தார்.

10. ஏற்கனவே கூறிய அறிவுரைகளை DSP சார் அறிவுறுத்தினார். நாங்கள் அனைவரும் சோப்பு போட்டு கைகளை கழுவி

கொண்டோம். நானும், பாலமுருகன், DSP சார், இன்னொரு சாட்சி கணேசன் மற்றும் போலிசார் ஆகியோர் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலுருந்து கல்லல் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு கிளம்பினோம். கிளம்புவதற்கு முன்பாக என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரில் நானும், அரசு சாட்சி இருவரும், DSP–யும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்படைப்பு மகஜரில் 3 பக்கங்களிலும் அடிப்பகுதியில் உள்ள 3 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காலை சுமார் 10.00 மணிக்கு மேல் இருக்கும். கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்பாக உள்ள பஸ்டாண்டில் நானும் அரசு சாட்சி பாலமுருகன் என்பவரும் கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்றோம். அலுவலகம் பூட்டி இருந்தது. நானும் அரசு சாட்சியும் சைகை செய்யாமல் அலுவலகத்திலிருந்து வந்துவிட்டோம். வெளியில் நின்ற DSP சார் நடந்த விபரங்களை என்னிடம் கேட்டார். நான் பஞ்சாயத்து அலுவலகம் பூட்டி உள்ள விபரங்களை கூறினேன். என்னுடன் வந்த அரசு சாட்சியிடமும் கேட்டார். அவரும் அவ்வாறே கூறினார். பின்பு எனது அலைபேசியிலிருந்து 1ம் எதிரிக்கு Speaker on செய்து தொடர்பு

கொள்ளுமாறு DSP சார் கூறியதன்பேரில் நானும் தொடர்பு கொண்டேன். 1ம் எதிரி அலைபேசியில் தான் புதுக்கோட்டைக்கு அருகில் இருப்பதாகவும், வருவதற்கு சாயங்காலம் ஆகும் என்றும் என்னிடம் கூறினார். அதன்பின்பு நானும் அரசு சாட்சி பாலமுருகனும் அன்று மாலை 1ம் எதிரியின் அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு அவர் இல்லை. நானும் அரசு சாட்சியும் அலுவலகத்திலிருந்து வந்துவிட்டோம். நான் எவ்வித சைகையும் செய்யவில்லை. DSP சார் என்ன ஆச்சு என்று கேட்டார். அலுவலகம் பூட்டி உள்ளதை கூறினேன். மற்றொரு அரசு சாட்சி பாலமுருகனிடமும் கேட்டார். அவரும் அவ்வாறே கூறினார். அன்று நானும் மற்றொரு அரசு சாட்சி கணேசன், பாலமுருகன், DSP சார் ஒரு மகஜரில் கையொப்பம் செய்தோம். அந்த மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அந்த மகஜரை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அந்த **மகஜர் அ.த.சா.ஆ–8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. எனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட ரூ.13000/–ஐ என்னிடமே கொடுத்துவிட்டனர். விருப்பம் இருந்தால் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு ஏற்கனவே பினாப்தலீன்

பவுடர் தடவப்பட்ட ரூ.13000/– ஐ கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். 16.05.2023 அன்று சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு காலை சுமார் 8.00 மணிக்கு முன்பாகவே சென்று விட்டேன். ஏற்கனவே என்னிடம் பினாப்தலீன் பவுடர் தடவப்பட்டிருந்த பணம் ரூ.13000/–ஐ அதே அரசு சாட்சி கணேசனிடம் கொடுத்தேன். ஏற்கனவே கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ.5 ல் சொல்லப்பட்டுள்ள ரூபாய் நோட்டுக்களின் எண்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். ரூபாய் நோட்டுகளின் எண்கள் சரியாக இருந்தது. ஏற்கனவே கூறிய அறிவுரைகளை DSP சார் அறிவுறுத்தினார். கணேசன் என்பவர் பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட ரூ.13000/–ஐ எனது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்தார். நாங்கள் கைகளை சோப்புபோட்டு கழுவி கொண்டோம்.

12. என்னிடம் காண்பிக்கப்படும் மகஜரில் 3 பக்கங்களிலும் அடிப்பகுதியில் உள்ள 3 வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் கணேசன், பாலமுருகன், DSP ஆகியோர் கையொப்பம் செய்தனர். அந்த மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அந்த மகஜரை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அந்த

**மகஜர் அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து நானும், அரசு சாட்சிகள் இருவரும் அரசு வானத்தில் கிளம்பி கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு அருகில் உள்ள பஸ்டாப்பில் அரசு வாகனத்தினை நிறுத்தி எனக்கு ஏற்கனவே கூறிய அறிவுரையை DSP சார் ஞாபகப்படுத்தினார்கள். நானும் மற்றொரு அரசு சாட்சி பாலமுருகனும் கல்லல் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்றோம். DSP சார் மற்றும் மற்றொரு அரசு சாட்சி கணேசன், போலிசார் ஆகியோர் ஆங்காங்கே நின்று கொண்டுடிருந்தார்கள். நானும், பாலமுருகனும் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்றோம். அலுவலகம் பூட்டியிந்தது. நான் சமிக்கை எதுவும் செய்யவில்லை. நடந்த விபரத்தை DSP சார் என்னிடம் கேட்டார். அலுவலகம் பூட்டி உள்ள விபரத்தை சொன்னேன். மற்றொரு அரசு சாட்சி பாலமுருகனிடமும் கேட்டார். அவரும் அவ்வாறே சொன்னார். பின்பு என்னுடைய அலைபேசியிலிருந்து 1ம் எதிரியின் அலைபேசிக்கு loud speaker ஐ on செய்து பேசுமாறு கூறினார்கள். நானும் அவ்வாறு செய்தேன். 1ம் எதிரி அலைபேசியில் என்னிடம் நான் பஸ்டாண்ட் அருகில் உள்ள உடையப்பா டீக்கடையில் காத்திருக்குமாறு கூறினார்.

13. நானும் அரசுசாட்சி பாலமுருகனும் எனது பல்சர் இருசக்கர வாகனத்தில் DSP சார் சொன்னபடி உடையப்பா டீக்கடைக்கு சென்றோம். டீக்கடைக்கு சென்று அங்கு காத்திருந்தோம். அப்போது காலை சுமார் 11.00 மணிக்கு மேல் இருக்கும். அங்கு காத்திருந்தோம். வெகு நேரமாகியும் அவர் வரவில்லை. அப்போது DSP சார் வந்தார்கள் நடந்த விபரத்தை கேட்டார்கள். அவரிடம் நடந்த விபரத்தை கூறினோம். DSP சார் சொல்லி என்னுடைய அலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். நானும் போன்செய்து loud Speaker–ல் போட்டு கேட்ட போது ஐயனார் மண்டபத்திற்கு வந்து காத்திருக்குமாறு கூறினார். நானும் பாலமுருகன் சாரும் DSP சார் சொல்லியபடியே என்னுடைய பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்று ஐயனார் மண்டபத்திற்கு அருகில் சென்று காத்திருந்தோம். அப்போது 1ம் எதிரி நாச்சியப்பன் Splender இருசக்கர வாகனத்தில் தேரடி முக்கிற்கு வாங்க என்று கூறினார். நான் உடனடியாக DSP சாருக்கு போன் மூலமாக அவர் கூறிய விபரத்தை கூறினேன். அவர் கூறிய படி நீங்கள் அங்கு இருசக்கர வாகனத்தில் செல்லுங்கள், நாங்கள் உங்களை பின்தொடர்ந்து வருகிறோம் என்று கூறினார். நானும் அரசு சாட்சி பாலமுருகனும் இருசக்கர வாகனத்தில் தேரடி முக்கிற்கு அருகில்

உள்ள மாஸ்டர் டீக்கடையில் வண்டியை நிறுத்தினோம். பின்பு DSP மற்றும் அரசு சாட்சி, போலிசார் பின்தொடர்ந்து வந்தனர். தேரடி கருப்பர் கோவில் அருகில் DSP மற்றும் அரசு சாட்சி கணேசன், குழுவினர் வண்டியை நிறுத்திவிட்டு ஆங்காங்கே நின்று கொண்டு எங்களை கண்காணித்தனர். 1ம் எதிரி எங்களைப்பார்த்து மாஸ்டர் டீக்கடைக்குள் வரும்படி சைகை காட்டிக் கொண்டே கடைக்குள் சென்றார். நானும் அரசு சாட்சி பாலமுருகனும் மாஸ்டர் டீக்கடைக்குள் சென்றோம். அங்கு நாச்சியப்பன் அவர்களின் கார் ஓட்டுநர் சங்கர் கணேஷ் அவர்களும் வந்திருந்தார். ஆஜர் 2ம் எதிரிதான் அந்த நபர் ஆவார்.

14. 1ம் எதிரி, 2ம் எதிரியிடம் நான் கேட்ட லஞ்சப்பணம் ரூ.13000/- ஐ கொடுக்குமாறு என்னிடம் கூறினார். அந்த கடையில் கூட்டமாக இருப்பதால் தேரடி முக்கிற்கு போவோம் எனக் கூறிவிட்டு 1, 2 எதிரிகள் அவரது இருச்சக்கர வாகனத்தில் சென்றார்கள். நானும் அரசு சாட்சி பாலமுருகனும் நடந்து தேரடி முக்கிற்கு சென்றோம். தேரடி முக்கில் 1ம் எதிரி பின்புறமாக இரண்டு கைகளையும்கட்டிக் கொண்டவாறு நின்று கொண்டிருந்தார். நான் கேட்ட லஞ்சப்பணம் ரூ.13000/-ஐ 2ம் எதிரி சங்கர் கணேஷிடம் கொடுக்குமாறு கூறினார். அங்கு நடந்தவற்றை

என்னுடன் வந்த அரசு சாட்சி பாலமுருகன் உன்னிடப்பாக பார்த்து கொண்டிருந்தார். நான் எனது சட்டையின்இடதுபுற மேல்பாக்கெட்டில் பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட பணம் ரூ.13000/–(26 நோட்டுகள்) ஐ எடுத்துக் கொடுத்தேன். 2ம் எதிரி பணத்தைப் பெற்றுக் கொண்டு தனது இரண்டு கைகளாலும் எண்ணிப்பார்த்து அவரது சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். 1ம் எதிரி என்னிடம் பஞ்சாயத்து கிளர்க் Strike–ல் இருப்பதால் சீக்கிரம் பார்த்து செய்து தருவதாக கூறினார். நான் DSP சார் சொல்லியபடி என்னுடைய தொப்பியை கழட்டி மாட்டி பணத்தை பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக சைகை செய்தேன். DSP சார் மற்றும் அரசு சாட்சி கணேசன் மற்றும் போலிசார் ஆகியோர் என் அருகில் வந்தார்கள். நானும் அவருடன் சென்றேன். அவர் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டார். நானும் நடந்த விபரத்தை சுருக்கமாக சொன்னேன். என்னுடன் வந்த அரசு சாட்சி பாலமுருகனிடமும் கேட்டார். அவரும் அவ்வாறே கூறினார். தேரடி முக்கில் நின்று கொண்டிருந்த 1ம் எதிரி சொன்னபடி 2ம் எதிரி என்னிடம் லஞ்சப்பணம் ரூ.13000/–ஐ பெற்றுக் கொண்ட விபரத்தை கூறி இருவரையும் அடையாளம் காண்பித்தேன். போலிசார் என்னை வெளியில் செல்லுமாறு கூறினார்.

நானும் சென்றுவிட்டேன். பின்பு 19.05.2023 அன்று கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களை சென்று பார்த்தேன். எனக்கு வீட்டு வரி ரசீது போட்டுவிட்டதாக கூறினார். நான் கல்லல் ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்று எனது பெயரில் போடப்பட்டிருந்த வீட்டு வரி ரசீதை ரூ.1980/- செலுத்தி பெற்றுக்கொண்டேன். அந்த ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இவ்வழக்கு தொடர்பாக சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

(எதிரி தரப்பில் குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.08.25 10:03:11 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.